முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2018 யூலை

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2018-07-22
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 09
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்..*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**ஸ்ரீவன்** ஒரு கனடியப் பிரசையாவார். அவர் பல்தேசியக் கம்பனியொன்றின் இலங்கைக் கிளையின் பிரதம செயற்பாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக 2016 செப்ரெம்பர் 15 ஆந் திகதி முதன்முறையாக இலங்கைக்கு வருகைதந்தார். 2016/17 ஆம் வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் அவர் இரண்டு தடவைகள் கனடாவுக்குச் சென்றதுடன் அங்கு மொத்தமாக 30 நாட்கள் தங்கியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

இலங்கையின் வரி நோக்கத்திற்காக 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கான **ஸ்ரீவனின்** வதிவிடத் தகைமையை (resident status) **அடையாளங் காண்க.**

*(தங்களது விடையானது தேவையான கணிப்பீடுகளுடன் தரப்படல் வேண்டும்.)* (05 புள்ளிகள்)

## வினா 02

**விஜேசிங்க** 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வரி மதிப்பீட்டு அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக் கொண்டார். எவரேனும் ஒருவர் வரி மதிப்பீடொன்றின்மீது திருப்தியடையாதவிடத்து அந்த வரி மதிப்பீட்டிற்கு எதிராக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்க முடியும். எவ்வாறாயினும், **விஜேசிங்க** குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேன்முறையீடு ஒன்றினைச் செய்யத் தவறிவிட்டார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வரி மதிப்பீடொன்றிற்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்காகக் குறித்துரைக்கப்பட்டுள்ள (prescribed) காலப்பகுதியைக் **குறிப்பிடுக.** (01 புள்ளி)

(b) காலங்கடந்த மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிப்பதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் கால நீடிப்பை வழங்கக்கூடிய இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் தவறுகையிலுள்ள வரிகளை அறவிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) வழிமுறைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட பி கம்பனியின்** 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வரிவிதி வருமானத்தின் மீதான வரி ரூ. 10,235,000/- ஆகும். கம்பனி 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கு சுய வரி மதிப்பீட்டின் கீழ் செலுத்தவேண்டிய காலாண்டு வருமான வரிக் கொடுப்பனவுகளைச் செய்யவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, தண்டத்தைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு காலாண்டிற்கும் செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த வருமான வரித் தொகையைக் **கணிப்பிடுக.** (01 புள்ளி)

(b) ஒவ்வொரு காலாண்டிற்கும் வருமான வரி செலுத்தவேண்டிய உரிய திகதிகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

தனது வதிவிடத்தில் கணக்கியல் நிறுவகமொன்றை நடாத்திவரும் **சந்துன்,** கணக்கீடு, கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனைச் சேவைகளை வழங்கி வருகிறார். அவர் தனது வாடிக்கையாளர்கள் சார்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இடம்பெறும் கலந்துரையாடல்களுக்குத் தொடர்ந்து செல்லவேண்டியிருப் பதால் தனது தொழில்சார் வருமானத்திலிருந்து, வதிவிடத்திற்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத் திற்கும் இடையிலான பிரயாணத்திற்கான பிரயாணச் செலவைக் கழிப்பனவாகக் கோரியிருந்தார். எவ்வாறாயினும் உதவி ஆணையாளர் இச்செலவினைக் கழிப்பனவாக அனுமதிக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

உதவி ஆணையாளர் இச்செலவினை அனுமதிக்காது விடலாமா என்பதை **விபரிக்குக.**

*(நீங்கள் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோள் காட்டலாம்)*

(05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**றுவான்** மற்றும் **நுவான்** ஆகிய இரு நண்பர்கள் **சக்தி பங்குடமை** என்ற பங்குடமை வியாபாரத்தை நடாத்தி வருவதுடன் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றனர். அவர்கள் சீமெந்திலான நடைபாதைக் கற்களை உற்பத்திசெய்து உள்ளூர்ச் சந்தையில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின்படி, பங்குடமையின் புரள்வு (turnover) மற்றும் நிகர இலாபம் (Net profit) முறையே ரூ.32,354,000/- மற்றும் ரூ.15,620,000/- ஆகும்.

(1) நிகர இலாபத்தை அடைவதற்கு பின்வரும் செலவுகள் கழிக்கப்பட்டிருந்தன :

| | ரூ. |
|---|---|
| பங்காளர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் | 1,200,000 |
| **நுவானின்** மனைவிக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் | 600,000 |
| கட்டடத்திற்கான சோலைவரி | 25,000 |
| **றுவானுக்குச்** செலுத்தப்பட்ட வாடகை | 480,000 |
| வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் ரூ. 960,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிறீற்றுக் கலவை இயந்திரத்திற்கான பெறுமானத்தேய்வு | 144,000 |

(2) வியாபாரத்தை முகாமை செய்வதில் இரு பங்காளர்களும் ஈடுபடுவதுடன் ஒவ்வொருவரும் மாதாந்தச் சம்பளமாக ரூ. 50,000/- பெற்றுக்கொள்கின்றனர். பங்குடமையின் கணக்காளராக இருக்கும் **நுவானின்** மனைவிக்கு மாதாந்தச் சம்பளமாக ரூ. 50,000/- வழங்கப்படுகிறது.

(3) பங்குடமையானது வியாபார வளாகத்தின் (business premises) உரிமையாளரான **றுவானுக்கு** மாதாந்த வாடகையாக ரூ.40,000/- செலுத்துவதுடன் வளாகத்தின் சோலைவரி ரூ.25,000/- இனையும் பொறுப்பேற்றுக் கொண்டது.

(4) நிலையான வைப்பின் மீது வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூ. 14,000/- பங்குடமையின் நிகர இலாபத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வட்டி மீது நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்படவில்லை.

(5) 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியில் இருந்த எல்லாச் சொத்துக்கள் மீதும் வரி நோக்கத்திற்காக பெறுமானத்தேய்வு பூரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(6) ஏனைய எல்லாச் செலவுகளும் வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கத்தக்கவையாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பங்குடமையின் பிரிபடத்தக்க இலாபத்தைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) பங்குடமையின் வருமான வரிப் பரிப்பினைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) பங்குடமையிலிருந்து பங்காளர்கள் பெற்றுக்கொள்ளும் இலாபம் மற்றும் ஏனைய வருமானங்களின் பகிர்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட டீ.பி.எல். கம்பனி (DPL)** உள்ளூர் சீனி உற்பத்தியாளர் ஒருவரின் விநியோகத்தராகும். இக்கம்பனி ஏனைய உணவுப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யும் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளது. 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கணக்கேடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) கம்பனியின் விற்பனைகள் பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| சீனி விற்பனை | 8,400,000 |
| உணவுப் பொருட்கள் மொத்த, சில்லறை விற்பனை | 3,130,000 |
| **மொத்தம்** | **11,530,000** |

(2) லொறி ஒன்றின் விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை ரூ. 1,620,000/-.

(3) கம்பனி செலுத்திய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) தொகை பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| சீனிக் கொள்வனவின் மீது | 120,000 |
| உணவுப் பொருட்களின் உள்ளூர்க் கொள்வனவின் மீது | 27,000 |

(4) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கு மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்பட்ட NBT தொகை ரூ.30,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தவேண்டிய மீதி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் (NBT) தொகையை **மதிப்பிடுக.** (08 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட சுமுது ருவர்ஸ் அன்ட் டிரான்ஸ்போட்டேர்ஸ்** பெறுமதிசேர் வரிக்கு (பெ.சே.வ.) (VAT) பதிவுசெய்யப்பட்ட கம்பனியாவதுடன் அது போக்குவரத்து சேவைகளை வழங்கிவருகிறது. கம்பனியின் ஏடுகளிலிருந்து 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன :

(1) விற்பனைகள் (பெ.சே.வரி தவிர்த்து) :

| | **ரூ.** |
|---|---|
| சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்திலிருந்து | 3,280,000 |
| பொதுப் பயணிகள் போக்குவரத்திலிருந்து | 1,430,000 |
| வாடகைக் கார்களிலிருந்து | 3,625,000 |
| **மொத்தம்** | **8,335,000** |

(2) கம்பனியால் செலுத்தப்பட்ட உள்ளீட்டு பெ.சே.வரி :

| | ரூ. |
|---|---|
| கார்களின் காப்புறுதிமீது – வாடகைக்குப் பயன்படுத்தப்பட்டவை | 248,000 |
| சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்து தொடர்பான செலவுகளின்மீது | 137,000 |
| பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் தொடர்பான செலவுகளின்மீது | 86,000 |

(3) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கு கம்பனி தவணைக் கட்டணங்களாகச் செலுத்திய தொகை ரூ. 220,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய மீதி (மேலதிகமாகச் செலுத்தப்பட்ட) பெறுமதிசேர் வரித் தொகையினை **மதிப்பிடுக.** (08 புள்ளிகள்)

(b) 2016 மே 05 ஆந் திகதியிடப்பட்ட வரி விற்பனைப்பட்டியலொன்றின்மீது (tax invoice) செலுத்தப்பட்ட வரி 2016 யூன் 30 இல் முடிவடைந்த காலாண்டிற்கோ அல்லது அதற்குப் பிந்திய வரி விதிக்கத்தக்க காலப்பகுதிகளிலோ அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரியாக கம்பனியால் கோரப்பட்டிருக்கவில்லை. கம்பனி 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கு இதனைக் கோர விரும்புகிறது.

பெ.சே. வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இவ் உள்ளீட்டு வரியைக் கோருவதற்கான (claim) சட்டப்படியான காலவரையறையை **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட சுபிபி (தனி) கம்பனி (SPL)** காய்ந்த பூக்களின் ஒழுங்கமைப்புகளை உற்பத்தி செய்து உள்ளூர்ச் சந்தைக்கு விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 2017 மார்ச் 31 இல் இருந்த வாறான கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் மொத்த ஒதுக்கங்கள் முறையே ரூ.20,000,000/- மற்றும் ரூ. 8,800,000/- ஆகும்.

2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கான **SPL** இன் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கான கம்பனியின் புரள்வு மற்றும் வருமான வரிக்கு முந்திய நிகர இலாபம் என்பன முறையே ரூ.564,600,000/- மற்றும் ரூ.24,650,000/- ஆகும்.

(2) ஏனைய வருமானம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :

| | ரூ. |
|---|---|
| திறைசேரி உண்டியல்களிலிருந்து பெற்ற வட்டி | 2,205,000 |
| பெறப்பட்ட நிகர பங்கிலாபம் | 564,000 |
| இயந்திர விற்பனை மீதான இலாபம் | 1,000,000 |
| வாடகை வருமானம் | 1,800,000 |
| | **5,569,000** |

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விபரம் :

- ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் :

| | ரூ. |
|---|---|
| கணினிகள் | 600,000 |
| மென்பொருள் - இறக்குமதி | 350,000 |
| மோட்டார் கார் - பிரதம நிறைவேற்று அதிகாரியால் பயன்படுத்தப்பட்டது | 4,600,000 |
| தளபாடம் | 165,000 |
| இயந்திரம் | 5,360,000 |
| | **11,075,000** |

- ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகள் :

  2010/11 ஆம் வரிமதிப்பாண்டில் ரூ.5,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் 2016 யூன் 30 ஆந் திகதி ரூ. 1,300,000/- க்கு விற்பனை செய்யப்பட்டது. பழைய இயந்திரத்தைப் பிரதியீடு செய்வதற்காக 2016 யூலை 01 ஆந் திகதி புதிய இயந்திரமொன்று ரூ.5,360,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டது.

- 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியில் இருந்த சொத்துக்களில் விற்பனை செய்யப்பட்ட இயந்திரம் தவிர்ந்த ஏனைய எல்லாச் சொத்துக்களுக்கும் வரி நோக்கத்திற்காக பெறுமானத்தேய்வு விடுதொகை பூரணமாகக் கோரப்பட்டுள்ளது.

(4) செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

- 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தாக்கல் செய்யப்பட்ட கணக்கீட்டுப் பெறுமானத்தேய்வு ரூ. 11,800,000/- ஆகும்.

- வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தின் திருத்தங்களுக்காக கம்பனி செலவிட்ட தொகை ரூ.645,000/- ஆகும். இக்கட்டடம் **SPL கம்பனியால்** கட்டப்பட்டதுடன் ரூ. 150,000/- மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **SPL** கம்பனி தனது தாங்கும் கம்பனியான (holding company) **பெஸ்ட் ஹோம்ஸ் பொதுக் கம்பனிக்கு** முகாமைத்துவக் கட்டணமாக ரூ. 6,000,000/- செலுத்தியுள்ளது.

- **SPL** வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கேற்ப தனது உற்பத்திகளை மேற்கொள்ள விரும்புகிறது. அதற்காக 2016/17 ஆம் வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் ரூ. 1,650,000/- கிரயத்தில் சந்தை ஆய்வொன்றினை (market survey) நடாத்தியது.

- சந்தை ஆய்வின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, தரத்தை மேம்படுத்துவதற்காக வெளியார் நிறுவனம் ஒன்றின் மூலம் தொழில்முறை ஆய்வொன்று (Industrial research) மேற்கொள்ளப்பட்டது. ஆண்டின் காலப்பகுதியில் கம்பனியானது இவ்வாய்வுக்கான கட்டணமாக ரூ. 2,500,000/- ஐச் செலுத்தியிருந்தது.

- கம்பனி அதன் தாங்கும் கம்பனியான **பெஸ்ட் ஹோம்ஸ் பொதுக் கம்பனியிடமிருந்து** ரூ.90,000,000/- கடனொன்றைப் பெற்றிருந்தது. ஆண்டின் காலப்பகுதியில் கம்பனி ரூ.7,127,500/- இனை தாங்கும் கம்பனிக்கு வட்டியாகச் செலுத்தியதுடன் அதனை நிதிச் செலவுகளுக்குத் தாக்கல் செய்திருந்தது.

- கம்பனியானது 2016/17 ஆம் வரிமதிப்பாண்டுக் காலப்பகுதியில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய கிராமமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கிராமப்புறமொன்றின் சமுதாய அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றிற்கு ரூ. 12,000,000/- நன்கொடையாக வழங்கியிருந்தது.

(5) ஏனைய எல்லாச் செலவுகளும் வரி நோக்கத்திற்காக அனுமதிக்கத்தக்கவையாகும்.

(6) கம்பனியானது 2015/16 ஆம் வரி மதிப்பாண்டிலிருந்து முன் கொணரப்பட்ட வரி நட்டம் (tax loss) ரூ.20,000,000/- இனைக் கொண்டிருக்கிறது.

(7) கம்பனி சுய வரி மதிப்பீட்டு வருமான வரியாக ரூ. 1,000,000/- செலுத்தியுள்ளது.

(8) 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டணக் (ESC) கொடுப்பனவு ரூ.2,832,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்காக பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) மொத்த நியதிச்சட்ட வருமானம்

(b) வரிமதிக்கத்தக்க வருமானம்

(c) வரிவிதி வருமானம்

(d) செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி

(e) செலுத்தவேண்டிய மீதி வரி

**மு.கு. :** ஏதேனும் செலவுகள் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது அனுமதிக்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

வதிவுள்ள தனியாள் ஒருவரான **ராமல்** பிரபலமான உற்பத்திக் கம்பனியொன்றில் தொழிற்சாலை முகாமையாளராகப் பணிபுரிகிறார். 2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கான (இதன் பின்பு ஆண்டு எனக் குறிப்பிடப்படும்) அவர் தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின் காலப்பகுதியில் அவரது தொழில்தருநரிடமிருந்து பின்வருவனவற்றைப் பெற்றுக் கொண்டார்:

- மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 160,000/-.
- 2017 மார்ச் மாதத்தில் பெறப்பட்ட உபகாரப் பணம் (Bonus) ரூ. 200,000/-.
- அவர் தொழிற்சாலைக்குச் சமீபமாக வாடகைக்குப் பெறப்பட்ட வீடொன்றில் தனது குடும்பத்துடன் வசிக்கிறார். அதன் மாத வாடகை ரூ. 35,000/- ஆகும். கம்பனி அவர் செலுத்தும் வாடகையை மீள நிரப்பி (reimburses) வருகின்றது.
- ஆண்டின் காலப்பகுதியில் அவரது மகன் **ஹிருண்** 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் அவனது அடைவுக்காக கம்பனி ரூ.50,000/- ஐ நன்கொடையாக வழங்கியது.

(2) அவர் இங்கிரியவில் அமைந்துள்ள பூர்வீக வீடொன்றைத் தனது தந்தையிடமிருந்து முதிசமாகப் பெற்றுக்கொண்டதுடன் எப்போதாவது வருகைதரும்போது அவ்வீடு அவரால் பயன்படுத்தப்படுகிறது (சோலை வரி நோக்கத்திற்காக அது ரூ. 60,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது).

(3) அதற்கு மேலதிகமாக **ராமலுக்கு** கொழும்பில் ரூ. 240,000/- சோலை வரி மதிப்பீடு செய்யப்பட்ட தொடர்மாடி வீடொன்று உள்ளது. இவ்வீடானது வெளிநாட்டவர் ஒருவருக்கு தளபாடங்களுடன் ரூ.40,000/- மாத வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டின் காலப்பகுதியில் 30% சோலை வரியையும் தளபாடத் திருத்தங்களுக்காக ரூ. 26,000/- ஐயும் **ராமல்** செலுத்தியிருந்தார்.

(4) அவரது மகன் **ஹிருண்** வர்த்தக வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கொன்றை வைத்திருப்பதுடன் ஆண்டின் காலப்பகுதியில் மொத்த வட்டியாக ரூ. 29,250/- பெற்றுக்கொண்டார்.

(5) ஆண்டின் காலப்பகுதியில் **ராமல்** திறைசேரி உண்டியல் முதலீட்டிலிருந்து வட்டியாக ரூ. 121,500/- பெற்றுக் கொண்டார்.

(6) ஆண்டின் காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட பங்கிலாபங்கள் பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| பங்கிலாபங்கள் - வரி விலக்கு இலாபங்களிலிருந்து | 17,500 |
| பங்கிலாபங்கள் - 10 % நிறுத்திவைத்தல் வரிக்கு உட்படுத்தப்பட்ட வேறு கம்பனிகளிலிருந்து பெறப்பட்டவை | 27,000 |
| | **44,500** |

(7) **ராமல்** சில பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிப் பங்குகளில் முதலீடு செய்திருந்ததுடன் ஆண்டின் காலப்பகுதியில் பங்கு வியாபாரத்தில் ரூ. 56,000/- நட்டமடைந்துள்ளார்.

(8) ஆண்டின் காலப்பகுதியில் **ராமல்** பின்வரும் நன்கொடைகளை வழங்கியிருந்தார் :

- அவரது கிராமக் கோயிலுக்கு பணமாக ரூ. 50,000/-.
- தேசிய சிறுநீரக நிதியத்திற்கு பணமாக ரூ. 100,000/-.

(9) சுய வரி மதிப்பீட்டு அடிப்படையில் வருமான வரி ரூ. 10,000/- செலுத்தியிருந்தார்.

(10) வருடத்திற்கான உ.போ.செ. (PAYE) கழிப்பனவு ரூ. 166,400/- ஆகும்.

மேலே தரப்பட்ட தகவல்களிலிருந்து,

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2016/17 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **ராமலுக்கு** பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்தவேண்டிய மீதி வரி

(d) வரி விலக்கு வருமானம், ஏதேனும் இருப்பின் (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |